ஏற்கனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்புடன்

சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்தே நடத்த வேண்டும்!

ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம்!

அனைத்துக் கட்சித் தலைவர்களும் வரவேற்பு! தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்!

சென்னை, ஜூன் 28-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வந்தார். அதில், ஏற்கனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டும் எனவும், அத்துடன் சேர்த்தே சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார். முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இத்தீர்மானத்தை அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஒருமனதாக வரவேற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.06.2024) சட்டமன்றப் பேரவையில், சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டு வரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற உயர்ந்த கோட்பாட்டின் வழியில் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற சமுதாய சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு, தனது சமூகநீதிப் பயணத்தை இந்த அரசு முன்னெடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமநிலையை கொண்டு வருவதே இடஒதுக்கீடு!

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை பெறுவதில் சம வாய்ப்புகளையும், சம உரிமைகளையும் கொண்டவர்களாக மாற்றுவதன் மூலம்தான் உண்மையான, பரவலான பொருளாதார வளர்ச்சி அடைந்த சமுதாயமாக நாம் மாற இயலும். அந்த நோக்கத்துடன்தான் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய தளங்களிலும் அனைத்துத்தரப்பு மக்களிடையேயும் ஒரு சமநிலையைக் கொண்டுவருவதற்காக இடஒதுக்கீட்டு கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒருங்கே வளர்ச்சியடைய வழிவகை செய்து, அதனைக் கடைப்பிடித்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம்கூட, இந்தப் பேரவையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு.கோ.க.மணி அவர்கள் பேசும்போது கூட, சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தார். சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தும் என்பதை முதலில் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பொருள் குறித்து இந்தப் பேரவைக்கு முழுமையான விவரங்களை எடுத்து ரைப்பது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஒன்றிய அரசால் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் பெரும்பணி!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அதாவது, ஒன்றிய அரசால் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948ன்கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு மாபெரும் பணி. இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒன்றிய அரசால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாபெரும் பணி.

மக்கள்தொகை தொடர்பான புள்ளி விவரங்கள் அனைத்தும் இக்கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசால் தொகுத்து வெளியிடப்படுகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 3ன்படி ஒன்றிய அரசுதான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தவேண்டும். ஆனால், பொதுவெளியில் பரவலாகத் தெரிவிக்கப்படும் ஒரு கருத்து என்னவென்றால், புள்ளிவிவரச் சட்டம் 2008, அதாவது, Collection of Statistics Act, 2008இன் அடிப்படையில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ளலாம் என்பதாகும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசு எடுப்பதே முறை!

இந்தச் சட்டத்தின்படி மாநில அரசுகள் சமூகப்பொருளாதார புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதே தவிர, இதே சட்டத்தின் பிரிவு 3, உட்பிரிவு (அ)ன்படி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7வது அட்டவணையிலுள்ள இனங்கள் தொடர்பாக புள்ளி விவரங்கள் சேகரிக்க இயலாது. அந்த 7வது அட்டவணையில் தான் மக்கள்தொகை கணக்கெடுப்பு 69 வது இனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இச்சட்டத்தின் பிரிவு 32ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948இன்கீழ் கணக்கெடுக்கப்படும் மக்கள்தொகை தொடர்பான புள்ளி விவரங்களை (Census data) சேகரிக்க இயலாது என்று மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் தொடர்பான வழக்கு தற்போது மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிலையில், பொதுவெளியில் சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளபடி 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் சட்டத்தின்கீழ் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள இயலாது. சட்டப்படியாக நிலைக்கக்கூடிய கணக்கெடுப்பு என்றால், அது ஒன்றிய சட்டமான மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின்கீழ்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவேதான், இப்பணியை ஒன்றிய அரசு மேற்கொள்வதுதான் முறையாக இருக்குமென்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணியான மக்கள்தொகை கணக்கெடுப்பினை 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளாமல் ஒன்றிய அரசு இன்று வரை காலம் தாழ்த்தி வருவது எதனால்? முதல் ஆண்டு கோவிட் பெருந்தொற்றைக் காரணமாக சொன்னார்கள். தற்போது கோவிட் சென்று 3 ஆண்டுகளுக்கு மேலான பின்பும் அப்பணியை மேற்கொள்ளாமல் இருப்பது ஒன்றிய அரசு தன் கடமையைப் புறக்கணிக்கும் செயல் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தொடர்ந்து கோரிக்கை வைப்பது மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மட்டுமல்ல, அத்துடன் சேர்த்து சாதிவாரிக் கணக்கெடுப்பையும் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று வலியுறுத்தி கடந்த 20.10.2023 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். அவ்வாறு ஒன்றிய அரசு களப் பணியை மேற்கொள்ளும்போது கிடைக்கப்பெறும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மாநில அரசு எடுக்கும் முடிவுகளுக்கும், இயற்றும் சட்டங்களுக்கும் தான் சட்டரீதியான பாதுகாப்பு எப்போதும் இருக்கும். மாறாக, அந்தந்த மாநில அரசுகள் ஒரு சர்வே (Survey) என்ற பெயரில் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, பின்னர் அதன் அடிப்படையில் சட்டங்களை இயற்றுவது என்றால் அது பின்னொரு நாளில் நீதிமன்றங்களால் ரத்து செய்யப்படும் வாய்ப்புள்ளது.

ஒன்றிய அரசு சாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும்!

எனவேதான், இந்தக் காரணங்களின் அடிப்படையில், ஏற்கெனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் சாதிவாரியான மக்கள்தொகைக் கணக்கெடுப்பையும் சேர்த்தே நடத்த வேண்டும் என்றும் இந்தப் பேரவை வாயிலாக பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிய விரும்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த தனித் தீர்மானம் வருமாறு :-

தீர்மானம்

"இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழிவகை செய்ய சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பு அவசியம் என்று இப்பேரவை கருதுகிறது.

எனவே 2021ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதிவாரியான கணக்கெடுப்பையும் இணைத்தே நடத்தவேண்டும் என்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது".

இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் வரவேற்றுப் பேசினர். இதனைத் தொடர்ந்து தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொதுவாழ்வில் அயராது பாடுபட்ட

அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள்!

நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன் 28-

"பொதுவாழ்வில் அயராது பாடுபட்ட அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள் அவர்கள்" என்று அவரது நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி., பிரிவு மாநில தலைவர் எம்.பி. ரஞ்சன்குமாருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து காங்கிரஸ் பேரியக்கத்தின் நாடறிந்த தலைவராக உயர்ந்த பெரியவர் எல். இளையபெருமாள் அவர்களின் அரசியல் வாழ்க்கை என்பது, காலத்தாலும், களத்தாலும் வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றதாகும்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் 1924ஆம் ஆண்டு பிறந்த இளையபெருமாள் அவர்கள், சமூக சேவகரும், துறவியுமான சகஜானந்தாவைப் பின்பற்றி எளிய மக்களுக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் பொது வாழ்க்கைக்கு வந்தவர்.

ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டம் - தஞ்சை மாவட்டத்தில் 1940 முதல் 1970 வரையில் நடந்த மிகப் பெரிய சமூகப் போராட்டங்களை நடத்தியவர் பெரியவர் இளைய பெருமாள் அவர்கள்.

நாடு விடுதலை பெறும் முன்னர், இளம்பருவத்தில் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய இளையபெருமாள் அவர்கள் அப்பணியில் இருந்து ஊர் திரும்பியபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகப் போராடி ஆறு மாதம் சிறைவாசமும் அனுபவித்துள்ளார்.

நாட்டின் விடுதலையுடன், தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காகவும் தொடர்ந்து போராடியுள்ளார். விடுதலைக்குப் பின்னரும்கூட, தேசிய இயக்கமான காங்கிரசில் இணைந்து அரசியல் பணியில் ஈடுபட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கு குரல் கொடுத்தவர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தவர். சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக 1952 முதல் 1967 வரை மூன்று முறை தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். நேரு அவர்கள் பிரதமராக இருந்த போது அமைக்கப்பட்ட அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு ஆணையத்தின் முதல் தலைவராகவும் பணியாற்றியவர் என்பதெல்லாம், இளையபெருமாள் அவர்களின் அரசியல் அடையாளங்கள்.

அவர் தலைமையிலான அகில இந்தியத் தீண்டாமை ஆணையத்தின் பரிந்துரையின் பலனாகவே, தீண்டாமைக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உருவானது என்பதே அவரது அரசியல் இலட்சியத்தின் உன்னதத்திற்கும், விழுமியத்திற்கும் வெளிப்படையான வரலாற்றுச் சான்று.

பெரியவர் இளையபெருமாள் அவர்கள், 1980ல் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமையும் போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞருடன் மிகுந்த நெருக்கமும் நட்புறவும் கொண்டிருந்தவர். 1998ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலான தமிழ்நாடு அரசின் விருதை முதன்முதலாக பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குத்தான் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். "சலிப்பேறாத சமூகத் தொண்டர்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாய் பாராட்டப்பட்டவர்.

அதுமட்டுமின்றி, பெருந் தலைவர் காமராஜர், கக்கன் போன்ற காங்கிரஸ் தலைவர்களுடன் நெருக்கமாக இருந்தவர் என்பதுடன், தேசிய அளவில் முன்னாள் பிரதமர்கள் நேரு முதல் இந்திரா காந்தி அம்மையார் வரையும் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவரும் ஆவார். இளம்பருவத்து நாடாளுமன்ற உறுப்பினராக அண்ணல் அம்பேத்கரைச் சந்தித்து, அவரது பாராட்டையும் பெற்றவர். இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவரான பெரியவர் இளையபெருமாள் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த 18.04.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்துள்ளேன் என்பதையும் இங்கு பெருமைபுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

பெரியவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடுவதுடன், "இளையபெருமாள் வாழ்க்கைச் சரித்திரம்" என்ற அவரது வாழ்க்கை வாவாற்று நூலையும் வெளியிடுவது பெரிதும் பாராட்டுதலுக்குரிய நிகழ்வாகும்.

பொதுவாழ்வில் பாடுபட்ட அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டு விழா சிறக்க எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க பெரியவர் இளையபெருமாள் புகழ்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

தொகுதி மேம்பாட்டு நிதியான 3 கோடி ரூபாய் முழுவதையும்

சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பும் - தொகுதியின் நலப்பணிகளுக்குச் செலவிட்டுக் கொள்ள முதல்வர் அனுமதி!

சட்டப்பேரவையில் அவை முன்னவர் துரைமுருகன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28 -

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மேம்பாட்டு நிதி உள்ளிட்ட மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த அவை முன்னவர் துரைமுருகன் அவர்கள், "சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் தொகுதி மேம்பாட்டு நிதி 3 கோடி ரூபாய் முழுவதையும், சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் மக்கள் நலப் பணிகளுக்குச் செலவிட்டுக் கொள்ள முதல்வர் அனுமதி வழங்கியுள்ளார்" என்று அறிவித்தார்.

தமிழ்நாட்டில் மொத்தம் 234 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. தமிழக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்கு ஒவ்வொரு வருடமும் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக அரசு வழங்கி வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என பல சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்காக வழங்கப்படும் ரூ.3 கோடி நிதியை சட்டமன்ற உறுப்பினர்களே பயன்படுத்திக்கொள்ள முதலமைச்சர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவ செலவிற்கான பணத்தை வழங்குவது குறித்து ஆய்வு செய்து தெரிவிப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளதாகவும், அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் திட்டம் செயல்படுத்துவதற்கான ஜி.எஸ்.டி.யையும் நீக்குவதற்கு முதலமைச்சர் ஒப்புக்கொண்டதாகவும் அமைச்சர் துரை முருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் அவை முன்னர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்ட தாவது :-

சட்டமன்றத்தைக் குறித்து இந்த அவையில் ஒரு வாதம் வந்தது. வழக்கமாக ஆளுங் கட்சியில் இருந்து, அதுவேண்டும். இதுவேண்டுமென்று கேட்கமாட்டார்கள். எதிர்க்கட்சியில் இருந்து தான் அதிகமாக கேட்பார்கள். தோழமைக் கட்சிகளும் கொஞ்சம் அடக்கி வாசித்துவிட்டார்கள். உறுப்பினர்கள் சிலபேர் சொன்ன கருத்துக்களை நான் முதல்வர் அவர்களிடத்தில் தெரிவித்தேன். இப்போது மூன்று கோடி ரூபாய் எம்.எல்.ஏ.க்களுக்கு fund தரப்படுகிறது. அதில் இரண்டு கோடி ரூபாய் அவர்கள் சொல்கிற வேலைக்கு கொடுக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் நாம் சொல்கிற வேலைக்கு கொடுக்கவேண்டும் என்று இருப்பது. அது கொடுத்தும் பிரயோஜனம் இல்லை. கைகட்டியதை போல் இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் மூன்று கோடி ரூபாயையும் அவர்களுடைய இஷ்டத்திற்கு செலவு செய்வதற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். முதல்வர் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். எனவே, எம்.எல்.ஏ.க்கள் இனிமேல் மூன்று கோடி ரூபாயை நீங்களே செலவு செய்யலாம். நீங்கள் என்றால் உங்களுக்கு இல்லை, தொகுதிக்குத்தான். (சிரிப்பு) அது ஒன்று. அடுத்து சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கு கொஞ்சம் அந்த Healthக்கு பணம் தேவைப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறேன். முதல்வர் அவர்கள் அதுகுறித்துப் பேசிவிட்டு, தெரிவிப்பதாகப் தெரிவித்திருக்கிறார்கள் என்ற செய்தியை உங்களுக்கு தெரிவித்து, இன்றும் நேரம் அதிகமாகிவிட்டது. உறுப்பினர் சக்கரபாணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், GST இருக்கிறது கிட்டத்தட்ட 50 இலட்சம், 60 இலட்சம் போய்விடுகிறது என்று சொன்னேன். அதையும் எடுத்துவிடுவதாக தெரிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.